தெரிந்து கொள்ளாமல் அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அரசின் கவனத்திற்கு வந்தவுடன், அந்த நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டன.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, பல கிராமங்களில் இதைப்போன்ற நிலை இருக்கின்றது என்பதை நான் இங்கே சொல்லாமலேயே அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். மேலும் இது போன்ற கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளாமலிருப்பதற்கு விரைவான உத்தரவை அறிவிப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : நான் ஏற்கெனவே சொன்னேன். அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. சிற்சில சிற்றூர் களில், அரசு ஆணையைத் தெரிந்துகொள்ளாமலே கெடுபிடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவை அரசின் கவனத் திற்கு வந்தவுடனே, நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் என் கவனத்திற்குக் கொண்டுவந்த அந்த இரண்டு நடவடிக்கைகளும் உடனேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

4. அரசினர் தீர்மானம்

தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துதல் குறித்து

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "தமிழ்நாடு சட்ட மன்ற விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இம் மன்றம் 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"தமிழ்நாடு சட்ட மன்ற விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இம்மன்றம் 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற் கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.